4th August 1965]

கனம் திரு. பூ. கக்கன்: மத்திய சர்க்காரைப் பொறுத்த மட்டில் ஒரு தரம் பெயிலானவர்களுக்கு உதவித் தொகை கொடுப்பது நிறுத்தப்படுகிறது. நமது மாநில அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் ஒருதரம் பெயிலானவர்களுக்கும் கொடுக்க லாம் என்பதாக அட்வைசரி கமிட்டியில் யோசனை சொன்னார்கள், அது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

திரு. வி. எஸ். எஸ். மணி: போஸ்ட் க்ராஜ்வேட் கோர்ஸ் படிக்கக் கூடிய மாணவர்கள் 100 பேர்களுக்குத்தான் உதவித் தொகை அளிக்கப்படுகிறது. ஆண்டுதோறும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகப்படுவதால் அந்தமாதிரி கொடுக்கக் கூடிய ஸ்காலர்ஷிப்பின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவார்களா ?

கனம் திரு. பூ. கக்கன்: முன்பு மிகக் குறைவாக இருந்தது. இப்போதுதான் 100 பேர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. காலப் போக்கில் நிதிநிலைமைக்குத் தகுந்தாற்போல் அரசாங்கம் இந்த யோசனையைப் பரிசீலனை செய்யும்.

திரு. எம். எஸ். செல்வராஜன்: நான் அறிந்த மட்டில் பாக்வர்ட், மோஸ்ட் பாக்வர்ட் சமூகத்தினருக்கு ஸ்காலர்ஷிப் வழங்க ரூ. 1,500 என்று வருமான வரம்பு வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. கால நிலைமையை உத்தேசித்து இந்த வருமான வரம்பை உயர்த்திக் கொடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் இருக்கிறதா?

கனம் திரு. பூ. கக்கன்: பொதுவாக, அந்தச் சமூகத்தினர் களிலும் மிக ஏழ்மை நிலையில் உள்ள எல்லா மாணவர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த வருமான வரம்பு அரசாங்கத்தினால் நன்கு பரிசீலனை செய்யப்பட்டு ஏற்படுத்தப் பட்டது. அதைக் கூட ரூ. 2,000 வரையில் வைக்கலாம் என்றும் சொல்லப்பட்டது. இப்போது இருக்கிற நிலைமையில் அதை உயர்த்துவதற்கில்லை.

* 72 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன்: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) ஹரிஜன மாணவர்களுக்கு வழங்கப்படும் ரெசிடென் ஷியல் நான்-ரெசிடென்ஷியல் ஸ்காலர்ஷிப்புகள் அம்மாணவர்கள் செலுத்த வேண்டிய சம்பளம், தனிக்கட்டணங்கள் ஆகியவற்றுக்குப் போதாமல் தங்கள் கைப்பணம் கொடுக்க வேண்டியுள்ளது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், இக்குறையை நிவர்த்திக்கும் உத்தேசம் அரசாங்கத்துக்கு உண்டா?

கனம் திரு. பூ. கக்கன்: (அ) எல்லா ஹரிஜன மாணவர் களுக்கும் முழுச் சம்பளச் சலுகை அளிக்கப்படுகின்றது. இவ்வாறு விதிவிலக்கு அளிக்கப்படாத சிறப்புச் சம்பளம், புத்த

[4th August 1965

கங்களுக்குண்டான செலவு, விளையாட்டுக் கட்டணம் முதலிய வைகளை அரிசன நலத்துறையினால் வழங்கப்படும் நான்-ரெசிடென்ஷியல் ஸ்காலர்ஷிப் ஈடுசெய்கிறது.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

(*a*) All Harijan students are exempt from payment of tuition fees. The non-residential scholarship granted by the Harijan Welfare Department covers those items of fees which have not been so exempted, viz., Special fees, cost of books and games fee, etc.

(*b*) Does not arise.

திரு. எம். எஸ். செல்வராஜன்: அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது இந்த ஸ்பெஷல் பீஸ் எல்லாம் பாடசாலைக்குப் பாடசாலை, கல்லூரிக்குக் கல்லூரி வித்தியாசமாக இருக்கிறது என்று சொன்னார்கள். அதுபோல் பீஸ் வசூல் செய்வதிலும் வித்தியாசம் இருக்கிறது, ஸ்காலர்ஷிப் தரும்போது லோயஸ்ட் மினிமம் பீஸ். ஸ்பெஷல் பீஸ் அளவுக்குக் கூடத் தரவில்லை என்கிற தகவல் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா? அப்படியானால் குறைந்தபட்சம் பெரும்பாலான பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் ஆகியவற்றில் இருக்கக் கூடிய ஸ்பெஷல் பீஸ், பீஸ் விகிதங்களை அனுசரித்து ஸ்காலர்ஷிப் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : The supplementary is very long and not clear.

கனம் திரு. பூ. கக்கன் : செகண்டரி ஸ்கூல்களில் படிக்கிறவர்களைப் பொறுத்தவரையில் ஸ்பெஷல் பீஸ் கொடுக்கப்படுகிறது. காலேஜைப் பொறுத்தவரையில் பீஸ், புஸ்தகங்கள், சாப்பாட்டுச் செலவு ஆகிய எல்லாவற்றுக்கும் சேர்த்துத்தான் கொடுக்கப் படுகிறது.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, இந்த ஸ்காலர்ஷிப் விண்ணப்ப பாரங்களில் ஆதித்திராவிட மாணக்கர்களுக்கு உரிய பாரங்களில் எம்.எல்.ஏ., பாராளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிடலாம் என்று இருக்கிறது. பின் தங்கிய வகுப்பு மாணவர்களுக்குரிய பாரங்களில் கையொப்பமிட அந்த உரிமை இல்லை. அந்த உரிமை வழங்கப்படாததற்குக் காரணம் என்ன? இரண்டாவதாக சர்டிபிகேட்டை முத்திரையிட்ட தாளில் தான் கொடுக்கவேண்டுமென்று இருக்கிறது. அதனால் சில சந்தர்ப்பங்களில் சங்கடம் வருகிறது. ஆகவே, அதையும் தளர்த்த வழிவகை செய்ய முடியுமா?

கனம் திரு. பூ. கக்கன் : அங்கத்தினர்களுக்கு அதிக உபத்திரவம் கொடுக்க வேண்டாம் என்பதற்காகச் செய்திருக்கலாம். மாநில அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் அட்வைசரி கமிட்டியில் சொன்ன யோசனைகளின்படிதான் செய்திருக்கிறோம்.

4th August 1965]

திரு. எஸ். முருகையயன் : சட்டக் கல்லூரியில் படிக்கும் ஹரிஜன மாணவர்கள் சர்க்கார் ஹாஸ்டலிலேயேதான் தங்கவேண்டுமென்ற விதி இருக்கிறதா? கட்டக் கல்லூரி ஹாஸ்டலிலே தங்கக் கூடாதா?

கனம் திரு. பூ. கக்கன் : இந்த அரசாங்கம் அவர்களுக்காக 15 லட்சம் ரூபாய் செலவு செய்து இந்த ஹாஸ்டலைக் கட்டியிருக்கிறார்கள். இதில் தங்காமல் அங்கே தங்குவது என்றால் அதற்கு அதிகத் தொகையானால் கையில் இருந்துதான் கொடுத்துக்கொள்ள வேண்டும். அரசாங்கம் இங்கு தங்கிப் படிப்பவர்களுக்கு என்ன உதவி அளிக்கிறார்களோ அதுவேதான் அவர்களுக்கும் அளிக்கப் படும்.

திரு. முனு. ஆதி : தலைவர் அவர்களே, முதல் முறை ஸ்காலர்ஷிப்புக்கு அப்ளை செய்யும்போது எம்.எல்.ஏ., எம். பி. கையொப்பத்திற்காக அலைகிறார்கள். ரின்யூவலுக்காவது அந்த அந்தக் கல்லூரி முதல்வர் அந்த மாணவன் அங்கு படிப்பதாக சர்டிபிகேட் கொடுத்தாலேயே, அதை ஏற்று வழங்குவதற்கு ஏற்பாடு செய்வார்களா?

கனம் திரு. பூ. கக்கன் : ரின்யூவலைப் பொறுத்தவரையில் தலைமை ஆசிரியர், கல்லூரி முதல்வர் சர்ட்டிபிகேட்டே போதுமானது, உடனடியாகத் தாமதமின்றிக் கொடுக்கிறார்கள். எங்காவது கஷ்டம் இருப்பதாகச் சொன்னால் அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரலாம்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : அரசியல் தியாகிகளின் குழந்தைகளுக்கு ஸ்காலர்ஷிப் அளிப்பதிலே வருமான வரம்பு, மார்க் வரம்பு விதிக்கப்பட்டிருக்கிறதா? அப்படியானால், அந்த வரம்புகளில் இருந்து விலக்கு அளிக்க அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. பூ. கக்கன் : அவர்களுடைய குழந்தைகளுக்கு கல்வி இலாகா மூலமாக உதவித் தொகை அளிக்கப்படுகிறது.

ஹரிஜனங்களுக்கு நிலம்

*73 **கேள்வி.—திரு. கோ. சி. மணி** : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1962-ம் ஆண்டிலிருந்து இன்றுவரை ஆடுதுறை தொகுதியில் ஹரிஜனங்களுக்காக ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலப் பரப்பு என்ன? நிலக்கிரயம் என்ன?

(இ) எவ்வளவு பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன?

(உ) கட்டப்பட்டுள்ள மொத்த வீடுகள் எவ்வளவு?